DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.511/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பாலாஜி | Age | : | 30 |
| F/N | : | சந்திரசேகர் | Occupation | : | முதல்நிலைக்காவலர், கீழத்தூவல் காவல் நிலையம் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of January 2024.

**08.01.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாரதபுரம் மாவட்டம் கீழத்தூவல் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16.01.2021ம் தேதி நான் உச்சிப்புளி காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணியில் இருந்தபோது அலுவல் சம்மந்தமாக என்னையும், தலைமைக்காவலர் வடிவேல்முருகன் என்பவரையும் சார்பு ஆய்வாளர் திரு.முருகநாதன் உச்சிப்புளி கல்கிணற்றுவலசை சுடுகாட்டு அருகே காலை 11.45 மணிக்கு அழைத்து சென்றார். அப்போது அந்த இடத்தில் ஆஜர் எதிரி மூங்கில் கம்புடன் சேர்ந்த இரும்பு ஈட்டியை வைத்திருந்தார். எங்களை பார்த்தவுடன் ஆஜர் எதிரி அங்கிருந்து ஓட எத்தனித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்தபோது தனது பெயர் மகாலிங்கம் (எ) மாசி என்றும், மங்களூரில் மீன்பிடிதொழில் செய்ததாகவும், கொரோனா காலம் என்பதால் அந்த வழியாக வரும் நபர்களை மிரட்டி பணம் பறிப்பதற்காக நிற்பதாக சொன்னார்.

2. அதன் பின்னர் ஆஜர் எதிரியை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது ஆஜர் எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும், தலைமைக்காவலர் வடிவேல்முருகன் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரியிடம் இருந்து 160 செ.மீ நீளமுள்ள மூங்கில் கம்புடன் இணைக்கப்பட்ட ஈட்டியை அத்தாட்சி மூலம் எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.511/2022**

| Deposition of the | : | PW2 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்ணன் | Age | : | 37 |
| F/N | : | செல்வராஜ் | Occupation | : | பஞ்சாயத்தில் பணிபுரிகிறேன் |
| Village | : | சேர்வைகாரன் ஊரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of January 2024.

**08.01.2024**
**(எதிரி ஆஜர்).**
**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாரதபுரம் மாவட்டம் சேர்வைகாரன் ஊரணியில் குடியிருந்து கொண்டு பஞ்சாயத்தில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 16.01.2022ம் தேதி நண்பகல் 01.45 மணிக்கு நானும், ராஜேந்திரன் என்பவரும் கல்கிணற்றுவலசை சுடுகாடு அருகே நின்று கொண்டிருந்தபோது உச்சிப்புளி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் செய்தார் என்றும், அதில் நானும், ராஜேந்திரன் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : இல்லை
**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**